Community Development and Panchayats.

* 180 *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Union Ministry of Agriculture has forwarded any communication to this State during 1973 on the reorganisation of Community Development Programme and suggested reorientation and strengthening the existing block agency and Panchayat Raj; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிப் பணிகளில், சமுதாய வளர்ச்சித் துறையும் ஊராட்சி நிறுவனமும் திறம்படச் செயல்புரியும் வண்ணம், வளர்ச்சி வட்டார முகவர் நிறுவனம் சீரமைத்துப் பலப்படுத்தப்பட வேண்டும் என்று 17—2—1973 ஆம் நாள் நடைபெற்ற தனது கூட்டத்தில் சமுதாய வளர்ச்சித்துறை, ஊராட்சி நிறுவனம் குறித்த ஆலோசனைக் குழு பரிவுரை ஒன்றைச் செய்துள்ளது. இந்தப் பரிவுரை குறித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக, இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் இதனை இந்த அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

(இ) வளர்ச்சி வட்டாரம், சமுதாய வளர்ச்சித் துறை ஆகியவற்றின் நிதி வாயில்களை ஒருங்கிணைப்பதற்கும், வளர்ச்சி வட்டாரத்தில் ஒருகிணைந்த வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் இயலும் வண்ணம், தமிழ் நாட்டில், வளர்ச்சி வட்டார முகவர் நிறுவனம், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பரிவுரை குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்க அவசியமில்லை என்று கருதப்பட்டது.

* 181 வினா.—திரு. ஆ. பரந்தாமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களைச் சீரமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வருவாய்த் துறை நிர்வாகத்தை மாற்றியமைப்பது குறித்து நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு தற்போது ஆராய்ந்து வருகிறது. எனவே, வட்டாரங்களின் எல்லைகளை மாற்றியமைப்பது குறித்தும் ஆராய்ந்து பரிவுரை செய்வதற்காக இப் பிரச்சினையை நிர்வாகச்

1973 நவம்பர் 19]

சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அரசு தெரிவித்துள்ளது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு தனது கருத்தை தற்போது வழங்கியுள்ளது. அவை அரசின் பரி சிலனையில் இருந்து வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சமீபத்தில் ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் சர்க்காருக்குக் கொடுத்துள்ள அறிக்கையின்படி ஆர்.டி. ஓ. போன்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகளை நீக்கி அதற்குப் பதிலாக கலெக்டருடைய உதவியாளரை வைத்துக் கொண்டே பஞ்சாயத்து யூனியன்களைக் கவனித்துக் கொள்ளும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்களுடைய கருத்து இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் இன்றைக்குச் சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே அதிகமான ஊராட்சி மன்றங்களையும், சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே குறைவான ஊராட்சி மன்றங்களையும் பெற்றிருக்கிறது. அதன் விளைவாக, நிர்வாகத்தில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன. இதைத் தவிர்க்கும் வகையில் விரைவில் சீரமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே, இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டுக்கு 375 ஒன்றியங்கள்தான் அமைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. அதிலும், கல்விராயன் மலைப்பகுதி நீங்கலாக 374 ஒன்றியங்கள்தான் போடப்பட்டிருக்கின்றன. அந்த 374 ஒன்றியங்களிலே அவ்வப்போது ஏற்பட்ட அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இது அடுத்த ஆண்டிலிருந்து மாநிலத் திட்டமாக மாற்றப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுபற்றிப் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேள்வி எண் 182. . . .

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) அதிகத் துணை வினக்கள் கேட்க அனுமதிப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். முன் இரண்டு கேள்விகளும் முக்கியமான கேள்விகள். ஆகவே, மேலும் அதிகமான துணைக் கேள்விகள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.